## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

**முன்னிலை :—திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**

**2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02 ம் நாள் சனிக்கிழமை**
**இடைநிலை மனு எண்.185/2023**
**உள்**
**அசல் வழக்கு எண்.48/2016**

1. M.S.சையதுமீரான்
2.C.சந்திரசேகரன்
3.B.ஜோதி ...மனுதாரர்கள்/வாதிகள்

... எதிர் ...

1.டாக்டர்.அருணாசலம்
2.ஊராட்சிமன்ற தலைவர், ந.புதுப்பட்டி, நத்தம்
3.மாவட்ட ஆட்சி தலைவர், திண்டுக்கல்
4.வட்டார வளர்ச்சி அலுவலர், திண்டுக்கல் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 27.07.2023 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 20.11.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுல்தான், அவர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாண்டுரங்கன், அவர்கள் முன்னிலையாகியும், 3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், மனுவினை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**உத்தரவு**

1) இம்மனுவானது உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17 கீழ் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:-**

2) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதியாவார். மேலும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்குச் சொத்தான பொதுப் பாதையில் எதிர்மனுதாரர்கள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேலும், வழக்கு தாக்கல் செய்தபோதே, வழக்குச் சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட வேண்டும் என்று இ.ம.எண்.312/2016 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டும், அதன் பின்னர் மீண்டும் நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிடவேண்டும் என்று இ.ம.எண்.71/2018 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அதுவும் அனுமதிக்கப்பட்டு ஒரே நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் வழக்குச் சொத்தான பொதுப்பாதையை உடைத்து கான்கிரீட் பில்லர்கள் அமைத்து 1 அடி அளவில் கம்பி வேலி போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி, ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி மனுதாரரும், மற்றவர்களும் 1ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு அவர் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாகவும், ஆனால், அதன் பிறகும் ஆக்கிரமிப்பை அகற்றாமல் கூடுதலாக பொது சாலையை ஆக்கிரமிப்பு செய்ய 13.07.2023ல் முயற்சித்ததாகவும், அதன்

பின்னிட்டு 4ம் எதிர்மனுதாரரான நத்தம் கிராம பஞ்சாயத்து வட்டார வளர்ச்சி அலுவலர், வழக்குச் சொத்தை பார்வையிட்டு அவர் தாக்கல் செய்த 29.07.2022 தேதியிட்ட எதிர்வழக்குரையில் வழக்குச் சொத்தில் 1ம் பிரதிவாதி அருணாசலம் என்பவரது புல எண்.529/6 ல் கம்பிவேலி பில்லரில் சுமார் 1–1/2 அடி வரை அரசு பாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதாகவும், அதனால், அந்த ஆக்கிரமிப்பு பகுதியைப் பொறுத்து அதை அப்புறப்படுத்த செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் பெறவேண்டியது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மேலும், 4ம் பிரதிவாதி வழக்குச் சொத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் தான் வழக்குச் சொத்தின் புல எண்.529/10A2A என்று உட்பிரிவான விபரம் அவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், எனவே, 1ம் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு விபரம் மற்றும் புதிய புல எண் சம்பந்தமாக வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியிருப்பதாகவும், எனவே, இவ்வழக்குரையை திருத்துவதனால் வழக்கின் தன்மை மாறாது என்றும், புதிய வழக்குமூலம் எதுவும் எழாது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாத பட்சத்தில் மனுதாரர்கள் மற்றும் பொதுமக்கள் உரிமைக்கு தீங்கு ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, மனுவை அனுமதித்து உத்தரவிடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:–</u>

5) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானது என்றும், அவற்றை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 11.10.2017 ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு தான் ஆட்சேபணை தாக்கல்

செய்துள்ளதாகவும், மேலும், மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையரை மறுநியமனம் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.71/18 மனுவும், வட்டார வளர்ச்சி அலுவலரை 4ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரிய இ.ம.எண்.65/21 மனுவும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது இவ்வழக்கு வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக உள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) மேலும், 4ம் பிரதிவாதி தன் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் பொய்யானது என்றும், 3ம் பிரதிவாதியான மாவட்ட ஆட்சியர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தனக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், 2ம் பிரதிவாதியான ஊராட்சிமன்ற தலைவர் வாதிகள் சம்பந்தமான கோப்புகள் அலுவலகத்தில் இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர்கள், 1ம் பிரதிவாதியை அலைக்கழிக்கவேண்டும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரர்கள் கோரியுள்ள திருத்தங்களை அனுமதித்தால் வழக்கின் தன்மையும், போக்கும் மாறும் என்றும், வழக்குச் சொத்தானது முறையாக வரைவுப்படுத்தப்பட்ட பாதை என்று அரசு மற்றும் வருவாய்துறை ஆவணங்களில் பதிவாகாத நிலையில் அரசுக்கு வீட்டடிமனைகளை உருவாக்கியவர்கள் ரோடு தானப்பத்திரம் எழுதி பதிவுசெய்து கொடுக்காத நிலையில், வழக்குச் சொத்து 20அடி பாதை என்று வாதிகள் கோருவது ஏற்புடையதல்ல என்றும், இம்மனுவை அனுமதித்தால் மீண்டும் நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும், இம்மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்தபோதே செயலுறுத்துக்கட்டளை

பரிகாரம் கோரவில்லை என்றும், 17.03.2020 ல் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தபிறகும் உரிய பரிகாரம் கோரவில்லை என்றும், எனவே, தற்போது இம்மனு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும், வழக்கை காலம் தாழ்த்தவேண்டும் என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனுவின் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர்கள் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளனர்.

8) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

9) இம்மனுவின் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்குச் சொத்து வாதிகள் மற்றும் ஏனைய குடியிருப்பு வாசிகளுக்கும், பொதுமக்களுக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்று விளம்புகை செய்யவேண்டியும், அதன் துணைப்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கில் வழக்குச் சொத்தானது நடுமண்டலம் கிராமம், செந்துரை ரோடு, புல எண். 529/10A ல் தென்வட லாக 20 அடி அகலத்தில் கிழமேலாக செல்லக்கூடிய பொது சிமிண்ட் சாலை என்று சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

10) மேலும், ராஜரத்தினம் என்பவர் வழக்குச் சொத்தான பொதுப்பாதையையும், வாதிகள் மற்றும் பிறநபர்களின் சொத்துக்களையும் சேர்த்து மொத்தம் 1 ஏக்கர், 60 செண்ட்டை 32 மனையிடங்களாக பிரித்து பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளதாகவும், அதற்கு 2ம் பிரதிவாதியிடம் மனையிட அங்கீகாரம் பெற்று தென்வடலாக 20 அடி பொதுப்பாதையை குடியிருப்பு வாசிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த பாதையை குடியிருப்பு வாசிகள் அனுபவித்து வருவதாகவும், அந்த பாதையில் 1–1/2 அடி அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்ய 1ம் பிரதிவாதி முயற்சித்து வருவதாகவும், 11.06.2016 ல் 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11) மேலும், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீ.ம.சா.ஆ.1, 11.10.2017 தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 1 அடி அளவிற்கு வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2வதாக தாக்கல் செய்யப்பட்ட 17.03.2020 தேதியிட்ட நீ.ம.சா.ஆ.3 நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் "**தாவா பாதையின் தென்பகுதியில், மேற்கிலிருந்து கிழக்காக சுமார் 36 பில்லர்கள் போடப்பட்டுள்ளது. பில்லர்களின் அடிப்பகுதியில் சிமிண்ட் கான்கிரீட் கீழ்பகுதியானது சுமார் 1 அடிக்கு தாவா பாதையில் அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்குச் சொத்தை மனையிட வரைபட அங்கீகாரத்தை வைத்து அளவீடு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.**"

12) மேலும், 29.07.2022 ல் 4ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இந்த 4ம் பிரதிவாதி தரப்பில் நேரடியாக ஸ்தல ஆய்வு செய்தபோது ந.புதுப்பட்டி ஊராட்சி, திருநகர் கிராமத்தில் புல எண்.529/10A2A ல் அரசுக்குச் சொந்தமான இடத்தில் சுமார் 20 அடி அகல சிமெண்ட் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதில் நெடுஞ்சாலை ரோட்டில் வடக்கு/தெற்கு பாதை கிழக்குப்புறம் செல்லும் பொழுது

சிமெண்ட் பாதைக்கு வலதுபுறம் 1ம் பிரதிவாதி அருணாச்சலம் என்பவரது புல எண்.529/26ல் கம்பி வேலி பில்லரில் சுமார் 1–1/2 அடி வரை அரசுப்பாதையினை ஆக்கிரமித்து கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது.

13) மேற்கண்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கைகள் மற்றும் 4ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. இவ்விடத்தில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் கோரும் பரிகாரம் காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் இம்மனுவை அனுமதிக்க முடியாது என்றும், மனுச்சொத்து பொதுப்பாதை அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து பார்க்கையில் வழக்குச் சொத்து பொதுப்பாதையா? இல்லையா? என்பது வழக்கின் விசாரணையின் மூலம் தீர்மானிக்கப்படும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

14) அதேசமயம், இம்மனு காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ததில், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்பான **Rameeza Beevi and others Vs. Mohammed Ibrahim (http://indiankanoon.org/doc/1370657/** என்ற வழக்கை மேற்கோள் காண்பித்தார். மேற்படி வழக்கில் **“The registration of the document is a notice to everyone claiming any right, title and interest therein; even otherwise the respondents in the written statement filed on June 15, 1988 has specifically pleaded about the gift being made by Ramdeo Singh in their favour. Despite that, the appellant had not taken any steps till November, 1992, by which time even the prayer for declaration within the limitation of three years from the date of knowledge had got time barred. Therefore, the appellant is not entitled to amend the plaint which would prejudicially affect the rights of the respondents.”** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15) மேற்படி முன்தீர்ப்பை பரிசீலனை செய்ததில், விளம்புகை பரிகாரமானது நிகழ்வு குறித்து தெரியவந்த தேதியிலிருந்து 3 வருடத்திற்குள் கோரப்படவேண்டும் என்றும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் அந்த பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்பட்டதாக கருதப்படும் என்றும், எனவே, 3 வருடங்கள் கழித்து விளம்புகை பரிகாரம் கோருவது ஏற்கத்தக்கதல்ல என்றும், அதனால் வழக்குரையை திருத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

16) ஆனால், இவ்வழக்கை பொறுத்தவரை, வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளது என்பது வழக்கு நிலுவையிலுள்ள காலத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மூலமும், 4ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை மூலமும் தெரியவந்துள்ளது. எனவே, அதைப் பொறுத்து செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோருவதற்கு மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது என்பதால், மேற்கண்ட முன்தீர்ப்பு இம்மனுவிற்கு பொருந்தாது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

17) மேலும், மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் முன்தீர்ப்பான **Narayanan Vs. Alagarsamy** (**http://indiankanoon.org/doc/110066786/** என்ற வழக்கை மேற்கோள் காண்பித்தார். அதில் "**The suit was filed in the year 2007. During the pendency of the suit, the defendants filed Interlocutory Application in I.A.No.603 of 2013 to amend the plaint in O.S.No.179 of 2007 to include a defendants prayer for mandatory injunction to remove the encroachments committed by the defendants and to hand over the right in possession to the plaintiff by the suit. Similar application was filed in I.A.No.604 of 2013 to make corresponding amendment in the petition filed by the petitioner in I.A.No.366 of 2007 seeking injunction.**

18) **It is the further case of the plaintiff that the defendants have encroached further, after suit. This report of an Advocate Commissioner is certainly in favour of revision petitioner regarding encroachment. It is true that the application for appointment of an Advocate Commissioner is to enable the parties to obtain evidence and not to collect evidence. This principle does not stand in the way of plaintiff seeking amendment of plaint based on any subsequent event or for an amendment on the basis of such report. Merely because, the plaintiff has sought for amendment in tune with the findings of the Advocate Commissioner regarding encroachment, the application cannot be dismissed as plaintiff should be given an opportunity to prove his case and seek relief of mandatory injunction. Even the question of limitation can be decided at the time of trial."** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

19) மேற்படி முன்தீர்ப்பு பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாக நீதிமன்ற ஆணையர் 17.03.2020 ல் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், கூடுதலாக 29.07.2022 ல் தாக்கல் செய்யப்பட்ட 4 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையிலும் வழக்குச் சொத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாக தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 4 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை மூலமும், வழக்குச் சொத்தின் உட்பிரிவு மற்றும் ஆக்கிரமிப்பு விபரமும் உறுதிப்பட தெரியவந்ததாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் வழக்குரையில் திருத்தம் செய்யவேண்டும் என்றும், புதியதாக சேர்க்கவேண்டும என்று கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்படவில்லை என்றும், மேலும், மேற்படி பரிகாரம் கோருவதால் அசல் வழக்கின் தன்மையோ, வழக்குமூலமோ மாறுவதற்கு எவ்வித வாய்ப்புமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர்கள் கோரியுள்ள திருத்தங்களை வழக்குரையில்

மேற்கொள்ள அனுமதிக்கலாம் என்றும், மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.**

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.12.02 16:06:50 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> **:–இல்லை.**

V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2023.12.02 16:06:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**